# ‘ஓடிசம்’ பிள்ளைகளின் உலகத்தை அறிந்து கொள்வோம்



Dr. எஸ்.தேவாநந்தன்
(Chairman, OSILMO Autism Center)

ஓடிசம் பிள்ளைகள் என்பவர்கள் யார்? இவர்கள் எவ்வாறு இருப்பார்கள்? இப்பிள்ளைகளை எவ்வாறு கண்டறிவது போன்ற பல தரப்பட்ட குழப்ப நிலைமைகள் நம்முள் பலபேருக்கு உண்டு.

மேலும் கூறுவதாயின் ஓடிசம் குழந்தைகள் உள்ள குடும்பத்தவர்கள், பெற்றோர்கள் கூட எமது பிள்ளைக்கு இவ்வாறு ஒரு பிரச்சினை இருக்கிறது என்று கூட தெரியாது உள்ளனர்.

இதன் காரணமாக என்ன நடக்கிறது என்றால் நாட் செல்லச் செல்ல இக்குழந்தைகள் இளைஞர்களாகி பெரியவர்கள் ஆகின்றனர்.

இவர்களைப் பைத்தியம் என்ற போர்வையில் எத்தனை குடும்பங்களில் இவர்கள் தங்களை தாங்களே அறியாதவர்களாக வெளி உலகமே தெரியாது வீட்டிற்குள் அடங்கி ஓடிசம் உலகத்திற்குள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இது மிகவும் மனவருத்தத்திற்கும் வேதனைக்கும் உரிய விடயமாகும்.

ஓடிசம் என்ற சிறைக்குள் அகப்பட்டிருக்கும் எமது குழந்தைகளை சிறு வயதாக இருக்கும் போதே அதாவது மூன்று வயதிற்குள்ளேயே இவர்களை இனம் காண்பதன் மூலம் இச் சிறைவாழ்க்கையில் இருந்து அதாவது ஓடிசம் உலகத்தில் இருந்து இக்குழந்தைகளையும் நாளடைவில் சாதாரண வாழ்க்கைக்கு எங்களில் ஒருவராக கொண்டு வர முடியும்.

எனவே முதலில் நாம் ஓடிசம் குழந்தைகளை சிறுவயதிலேயே எவ்வாறு இனம் கண்டு கொள்வது என்பதைப் பார்ப்போம். பொதுவாக ஓடிசம் குழந்தைகளின் முக்கிய குணாதிசயங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. Social interactions and relationships.

2. Verbal and nonverbal communications.
3. Limited interests in activities or play.

இப்போது நாம் இவற்றை விரிவாக விளக்கத்துடன் பார்ப்போம்.

Social interactions and relationships.

✦ ஒடிசம் குழந்தைகள் மற்றவர்களுடன் சேர்வதிலோ பழகுவதிலோ விருப்பம் காட்டமாட்டார்கள். கூடுதலாக தனிமையையே விரும்புவார்கள் தமது வயதை ஒட்டிய பிள்ளைகளைக் கண்டால் கூட சேர்ந்து விளையாடுவது அவர்களைப் பார்த்துக் கதைப்பது அல்லது முகபாவனை செய்வது (Facial expression) எதுவும் காணப்பட மாட்டாது. இவர்கள் எதையும் பொருட்படுத்தாது காணப்படுவர்.

✦ கண்களைக் கண்களால் பார்த்தல் (Eye contact) மிகவும் குறைவாகவே காணப்படும். இல்லை என்றே சொல்லலாம். உதாரணமாக சாதாரண குழந்தை ஒன்றை எடுத்தால் அவர்களது பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால் திரும்பிப் பார்ப்பார்கள் ஆனால் ஒடிசம் குழந்தைகள் எவ்வளவு கூப்பிட்டாலும் அதை அலட்சியம் செய்வது போல் இருப்பார்கள். கடைசியில் கூப்பிடுபவர்களுக்கு கோபம் வரக்கூடிய அளவிற்கு இவர்களது செயற்பாடு இருக்கும். இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டியது இப்பிள்ளைகளிற்கு காது மிகவும் நன்றாகக் கேட்கும். கண் பார்வை நன்றாக இருக்கும் ஆனால் கேட்காதவர்கள் போல் இருப்பார்கள்.

✦ பக்கத்தில் இருப்பவற்றையோ தூரத்தில் இருப்பவற்றையோ காண்பிக்கும் போது அவற்றைப் பார்க்க மாட்டார்கள். உதாரணமாக வானத்தில் விமானம் செல்லும் போது காண்பித்தால் அதைப் பார்க்க மாட்டார்கள் அ'ட்சியமாக ஒன்றும் கேட்காதவர்கள் போல் இருப்பார்கள்.

✦ கூடுதலான ஒடிசம் குழந்தைகள் புதிதாக யாரையாவது கண்டால் பயப்படுவார்கள் சேரமாட்டார்கள். பலர் ஒன்றாக இருக்கும் இடங்களிற்கு செல்ல மாட்டார்கள். அவ்வாறு மற்றவர்கள் இருக்கும் இடங்களிற்கு சென்றாலும் யாரும் அங்கு இல்லாதது போல் இக்குழந்தைகள் தாங்கள் தனிமையாக ஏதாவது தங்களைத் தாங்கள் தூண்டும் செயலில் ஈடுபட்டு சந்தோசப்படுவார்கள். உதாரணமாக கால்களை ஆட்டுதல், கைகளை விசிறுதல் (Hand Flapping), உடலை முன்னும் பின்னுமாக அசைத்தல் (Body rocking), கதிரைகளில் காணப்படும் சிறு துளைகளையோ அல்லது ஏதாவது பொருட்களை நிலைக்குத்தாக வைத்து அங்கும் இங்குமாக தலையை அசைத்து கண்களால் அவற்றைப் பார்த்து சந்தோசப்படுவார்கள். இவ்வாறு பலவிதமான செயற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

✦ இக்குழந்தைகள் பொது இடங்களிற்கு செல்வதில் பின் நிற்பார்கள். உதாரணமாக பொதுச் சந்தை, திருமணவீடு போன்ற இடங்களிற்கு செல்லமாட்டார்கள்.

ஒரு நாள் ஒரு ஒடிசம் குழந்தையின் பெற்றோர் அக்குழந்தையை நன்றாக வெளிக்கிடுத்தி திருமண வீட்டிற்கு அழைத்துச்



சென்றார்கள். அங்கு திருமண மண்டபத்திற்குள் இக்குழந்தை செல்லவில்லை ஆனால் வெளியே நின்று விளையாடிக் கொண்டு இருந்திருக்கின்றார். கடைசியில் தாய் மாறி தந்தை மாறி இக்குழந்தையுடன் வெளியே இருந்துவிட்டு வந்துள்ளார்கள்.

- இக்குழந்தைகள் பெரிய சத்தங்களை கேட்க விரும்பமாட்டார்கள். அவ்வாறு ஏதாவது சத்தம் கேட்கும் போது இரு காதுகளையும் கைகளால் பொத்திக் கொள்வார்கள். உதாரணமாக வாகனங்களின் கோன் சத்தம், சில விசிறிகள் (Fan) வேலை செய்யும் போது எழுப்பும் சத்தம், கதவுகள் சாத்தப்படும் சத்தங்கள் எனப் பல.

- இவர்கள் சில வேளைகளில் அர்த்தமில்லாது சிரிப்பார்கள் அர்த்தம் இல்லாது அழுவார்கள். சில சமயம் பெற்றோர் பயப்படும் அளவிற்கு இவர்கள் அழுவார்கள். ஆனால் அங்கு ஒன்றுமே நடந்திருக்கமாட்டாது.

- சில ஓடிசம் குழந்தைகள் சோர்வாக காணப்படுவர். எதற்கும் பயப்படும் சுபாவம் காணப்படும். உதாரணமாக படிகளில் ஏறுவதற்கோ சிறிய உயரங்களில் ஏறுவதற்கோ பயப்படுவார்கள் பொது இடங்களிற்கு செல்லப் பயப்படுவர். புதிதாக யாரையாவது கண்டால் பயப்படுவர். பெரிய சத்தங்கள் எனப் பல.



- ஆனால் சில குழந்தைகள் இதற்கு எதிர்மாறாக மிகவும் சுறுசுறுப்பாகவும் எதற்கும் பயப்படாத தன்மையும் காணப்படும். எந்த உயரமானாலும் பயப்படாது படபடவென ஏறும் தன்மை காணப்படும். ஓர் இடத்தில் இருக்காது ஓடித்திரிதல், துள்ளுதல், கைகளை விசிறுதல், பக்கத்தில் காணும் பொருட்களை தட்டி விடுதல், அதை எடுத்தல், இதை எடுத்தல், பெற்றோரிற்கு அடித்தல் போன்ற தேவை இல்லாத செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். (Stereotyped behaviors)

- கூடுதலான ஓடிசம் பிள்ளைகள் கைகளிற்கு அகப்படும் எதுவானாலும் வாய்க்குள் வைப்பார்கள். உதாரணமாக விளையாட்டுப் பொருட்களைக் கொடுத்தால் அவற்றை வைத்து விளையாடுவதை விட்டு வாய்க்குள் வைப்பார்கள். அதேபோல் இப்பிள்ளைகள் கூடுதலாக மெழுகுதிரி, தீக்குச்சி இரேசர் போன்ற பொருட்களை வாய்க்குள் வைத்துச் சாப்பிடுவார்கள்.

இவ்வாறான பிள்ளைகளை வைத்திருக்கும் பெற்றோரும் குடும்பத்தில் உள்ள பெரியவர்களும் கடைசியில் ஒரு முடிவுக்கு வருவார்கள். இப்பிள்ளையை முன்னிலைப்பள்ளி (Pre School) யில் சேர்ப்பதன் மூலம் சாதாரண நிலைமைக்கு கொண்டு வரமுடியும் என்று இங்கு தான் முக்கியமாக குழந்தையின் நடவடிக்கைகளும் பழக்கவழக்கங்களும் சரியாகக் கண்டறியக்கூடிய இடமாகும்.

முன்பள்ளி ஆசிரியர்களே இரண்டாவது பெற்றோர்கள் என்பர். எனவே ஆசிரியராகிய நீங்களே இப்பிள்ளைகளை நன்றாக அவதானித்து இப்பிள்ளைகளில் காணப்படுகின்ற பிரச்சினைகளை வெளிப்படுத்தாது பெற்றோரை வரவழைத்து அவர்களது மனம் நோகாதவாறு அவர்களுடன் கலந்துரையாடி கூடிய சீக்கிரம் இவ்வாறான பிள்ளைகளை தகுந்த வைத்தியரிடம் காண்பித்து அதற்குரிய வழிமுறைகளை தேடிக் கொள்வது மிக

வும் சிறந்த விடயமாகும். எனவே முன்பள்ளி ஆசிரியர்கள் மிகவும் அவதானமாக பிள்ளைகளை அவதானிக்க வேண்டியது கட்டாயமாகும். ஏனெனில் இவர்கள் கண்டும் காணாததாக விட்டுவிட்டால் கடைசியில் இப்பிள்ளைகளின் வயதுகூடி பாடசாலைக்கு சென்றவுடன் மேலும் பல பிரச்சினைகளிற்கு முகம் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும். எனவே இதை அறிந்து எல்லோரும் அவதானத்துடன் நடந்து ஓடிசம் குழந்தைகளை சிறு வயதிலேயே கண்டறிந்து அதற்குரிய சரியான வழிமுறைகளை தேடிக் கொள்வதன் மூலம் ஓடிசம் குழந்தைகளையும் நாளடைவில் எமது சமூகத்தில் ஒருவராக மாற்ற முயலுங்கள். இது ஒவ்வொருவரதும் கட்டாயக் கடமையாகும்.



இந்த இதழில் நாம் ஓடிசம் குழந்தைகளின் முக்கிய குணாதிசயங்களில் ஒன்றைப்பற்றி பார்த்தோம். அடுத்த இதழில் அடுத்தடுத்த குணாதிசயங்கள் அதாவது ஓடிசம் குழந்தைகளின் பேச்சுத்திறன், அவர்களின் விருப்பு வெறுப்புக்கள், சாப்பாட்டு பழக்கவழக்கங்கள் போன்ற பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன.



# இரத்த விருத்திக்கு

பப்பாளிப் பழத்தில் விற்றமின்களும், தாது உப்புக்களும், போதிய அளவு சக்தியும் நிறைந்துள்ளதால் இதை உணவின் போது தினமும் ஓரிரு துண்டு பயன்படுத்திவர சத்துக் குறைபாட்டால் வரும் நோய்கள் தடுக்கப்படுவதுடன் நல்ல இரத்த விருத்தியையும் கொடுக்கும். மலச்சிக்கலைப் போக்கி இரத்தத்தை சுத்திகரித்து, தோலுக்கு நல்ல நிறத்தைத் தரும்.

மேலும், விலைமலிவாகவும் எளிதில் கிடைப்பதாலும் பப்பாளிப்பழத்தைக் கொண்டு சர்பத், ஜாம், அல்வா போன்ற உணவுப் பொருட்களைத் தயாரித்து பயன்படுத்தலாம்.